**பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
(அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது)
**மதுரைசாலை, பேகம்பூர், திண்டுக்கல்-624002.**

# தமிழ்த்துறை
# செங்காந்தள் இலக்கிய மன்றம் தொடக்க விழா
# பற்றிய அறிக்கை

06.10.2023 வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கலையரங்கத்தில் தமிழ்த்துறையின் செங்காந்தள் இலக்கிய மன்றம் தொடக்க விழா தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. கல்லூரி குழுமத்தின் அருட்சகோதரிகள், சிறப்பு விருந்தினர் ஆகியோர் இணைந்து குத்துவிளக்கு ஏற்றினர்.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஆ.ஜோஸ்பின் செலின் மேரி தொடக்க விழாவிற்கு வருகைபுரிந்திருந்த அனைவரையும் மகிழ்வுடன் வரவேற்றார். கல்லூரி செயலர் அருட்சகோதரி ஜோசப் செலின் அவர்களும், கல்லூரி நிர்வாகி அருட்சகோதரி பர்த்தலமேயு அவர்களும் இவ்விழாவிற்கு முன்னிலை வகித்தனர். அருட்சகோதரி முனைவர் சிறுமலர் அவர்கள் செங்காந்தள் மலரின் சிறப்பு மற்றும் தமிழ்மொழியின் சிறப்பு குறித்தும் தலைமையுரை ஆற்றினார். கல்லூரி துணை முதல்வர் அருட்சகோதரி அமலிபுஷ்பம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

இவ்விழாவில் தமிழ்த்துறை மாணவிகள் செங்காந்தள் இலக்கிய மன்றத்தின் பல்வேறு பொறுப்புகளை ஏற்றனர். இதில் **நிலோபர் ரக்ஷனா தலைவராகவும், தமிழ்ஸ்ரீ செயலாளராகவும், ரெனிட்டா நான்சி பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.** அதனைத் தொடர்ந்து அருட்சகோதரிகள், சிறப்பு விருந்தினர் ஆகியோர் இணைந்து இலக்கிய மன்றத்தின் பல்வேறு பொறுப்புகளை ஏற்ற மாணவிகளுக்கு மலர்க்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர்.

திண்டுக்கல் எம்.வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரி, தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் க.நாகநந்தினி அவர்கள் இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். **“வாழ்வியலுக்குத் தேவையான அனைத்து பண்புகளும் தமிழ் இலக்கியங்களில் மிகுந்து இருக்கின்றன என்றும் மாணவிகள் அவ்விலக்கியங்களை விருப்பத்துடன் படிக்க வேண்டும், தமிழை அடையாளமாக கொண்டு தமிழ் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்”** என்றும் தமது சிறப்புரையில் மாணவிகளுக்கு எடுத்துரைத்தார். தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர் திருமதி ஜீலிமேரி நன்றியுரை வழங்க நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

**பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

(அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது)

மதுரைசாலை, பேகம்பூர், திண்டுக்கல்-624002.

# தமிழ்த்துறை

## செங்காந்தள் இலக்கிய மன்றம் தொடக்க விழா

## பற்றிய அறிக்கை
















